

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.5.2025) பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட திரு.வி.க. நகர் மண்டலம், டெமல்லஸ் சாலையில் அமைக்கப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வின்போது, அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. , ப. தாயகம் கவி எம்.எல்.ஏ., மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், துணை ஆணையர் (பணிகள்) வ. சிவகிருஷ்ணமூர்த்தி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# சென்னையில் மழைநீர் வடிகால் - கால்வாய் தூர்வாரும் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் ஆய்வு செய்தார்! முதல் பக்கத் தொடர்ச்சி

பணிகளை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த மழைநீர் வடிகாலானது, முனுசாமி கால்வாயில் இருந்து பக்கிங்காம் கால்வாயினை இணைக்கும் வகையில் அமைக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் வார்டு 73, 76 மற்றும் 77-க்கு உட்பட்ட அங்காளம்மன் கோவில் தெரு, ராஜா தோட்டம் பழைய ஆடு தொட்டி சாலை, கே.எம். கார்டன் உள்ளிட்ட பகுதிகளில் மழைநீர் தேங்குவது தடுக்கப்படும்.

**ஓட்டேரி நல்லா கால்வாய்!**

தொடர்ந்து, திரு.வி.க. நகர் மண்டலம், ஓட்டேரியில் 10.3 கிலோ மீட்டர் நீளம் கொண்ட ஓட்டேரி நல்லா கால்வாயில் தூர்வாருதல், கரைகளை பலப்படுத்துதல், புதிய தடுப்பு சுவர் அமைத்தல், தடுப்பு சுவற்றின் மேல் வேலி அமைத்தல் உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஒவ்வொன்றும் 3.3 மீ அகலமும் 1.7 மீ உயரமும் கொண்ட இரண்டு நீர் போக்கு வழி பகுதிகள் கொண்ட ஓட்டேரி நல்லா கால்வாயில், மெட்ரோ இரயில் பணிகளுக்காக ஒரு நீர்போக்கு வழி பகுதி தற்காலிகமாக அடைக்கப்பட்டு, மற்றொரு நீர்போக்கு வழி பகுதியில் மழைநீர் தடையில்லாமல் வெளியேற வகை செய்யப்பட்டுள்ளது. பருவ மழை தொடங்கும் முன்னர் இரு நீர்போக்கு வழி பகுதியிலும் மழைநீர் வெளியேறும் வகையில் பணிகள் முடிக்கப்பட வேண்டும் என்று அலுவலர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

**ஓட்டேரி மெட்ரோ கட்டுமானப் பணிகள்!**

பின்னர், மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஓட்டேரி மெட்ரோ இரயில் நிலையக் கட்டுமானப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெறும் அனைத்து வெள்ளத் தடுப்பு பணிகளையும் விரைந்து முடிக்க வேண்டும் என்றும், அதற்கு தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் கூடுதல் பணியாளர்கள் மற்றும் இயந்திரங்களை கொண்டு அப்பணிகள் அனைத்தையும் விரைவில் முடிக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்நிகழ்வின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம் கவி, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (பணிகள்) வ.சிவகிருஷ்ணமூர்த்தி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



திராவிடப் பேரொளி அயோத்திதாச பண்டிதர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் நேற்று (20.05.2025) சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், துணை மேயர் மு.மகேஷ் குமார், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் ச.செல்வராஜ் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

## சென்னைப் பெரு நகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில்

# ரூ.255.60 கோடியில் 20 புதிய திட்டப் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

சென்னை, மே 21-

சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் சார்பில் ரூ.14.66 கோடி செலவில் 5 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, ரூ.255.60 கோடி மதிப்பீட்டில் 20 புதிய திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.5.2025) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் இயங்கும் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் சார்பில் சென்னை வெளிவட்ட சாலையில் உள்ள மீஞ்சூர், வெள்ளனூர், வரதராஜபுரம், திருநாகேஸ்வரத்தில் 11.46 கோடி ரூபாய் செலவில் 4 உடற்பயிற்சி பூங்காக்கள் மற்றும் 3.20 கோடி ரூபாய் செலவில் தியாகராய நகரில் சோமசுந்தரம் விளையாட்டு மைதானம் ஆகியவற்றை திறந்து வைத்து, 255.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 20 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

**சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம்!**

சென்னைப் பெருநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் எதிர்கால தேவைகளைக் கருதி பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப கட்டமைப்புகளை வலுப்படுத்துதல், அரசின் நகர்ப்புற மேம்பாடு மற்றும் பெருநகரத் திட்டமிடல் தொடர்பான கொள்கை முடிவுகளை செயல்படுத்துதல், முழுமைத் திட்டம் மற்றும் விரிவான வளர்ச்சித் திட்டங்களை அமல்படுத்துதல் போன்ற பல்வேறு பணிகளை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் செயல்படுத்தி வருகிறது.

**திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற திட்டப் பணிகளின் விவரங்கள்!**

சென்னை வெளிவட்ட சாலையிலுள்ள மீஞ்சூர், வெள்ளனூர், வரதராஜபுரம் மற்றும் திருநாகேஸ்வரம் ஆகிய நான்கு இடங்களில் மொத்தம் 11 கோடியே 46 இலட்சம் ரூபாய் செலவில், திறந்தவெளி விளையாட்டு மைதானங்கள், சிறார் விளையாட்டுப் பகுதிகள், யோகா தளம் உள்ளிட்ட பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்களும், பசுமையான புல்வெளிகள், நடைபாதை, உயர் மின்விளக்குகள் மற்றும் வாகன நிறுத்துமிடங்கள் போன்ற அடிப்படை வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள நவீன உடற்பயிற்சி பூங்காக்கள்;

சென்னை, தியாகராய நகர், சோமசுந்தரம் விளையாட்டு மைதானத்தில் 3 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் கிரிக்கெட் ஆடுகளம், கூடைப்பந்து, கைப்பந்து, பூப்பந்து மற்றும் மேஜைப்பந்து விளையாட்டு ஆகிய வசதிகளுடன் மேம்படுத்தப்பட்ட விளையாட்டு மைதானம்;

என மொத்தம் 14 கோடியே 66 இலட்சம் ரூபாய் செலவில் முடிவுற்ற திட்டப் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**அடிக்கல் நாட்டப்பட்ட புதிய திட்டப் பணிகளின் விவரங்கள்!**

அய்யப்பன்தாங்கல் மாநகர பேருந்து நிலையத்தை 18 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், திருவான்மியூர் மாநகர பேருந்து நிலையத்தை 28 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், ஆவடி மாநகர பேருந்து நிலையத்தை 36 கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், பாடியநல்லூர் மாநகர பேருந்து நிலையத்தை 10 கோடியே 96 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், வள்ளலார் நகர் மாநகர பேருந்து நிலையத்தை 9 கோடியே 99 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் மேம்படுத்தும் பணிகள்;

அசோக் நகரில் 12 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், மகாகவி பாரதியார் நகரில் 7 கோடியே 18 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், இந்திரா நகரில் 4 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், ராஜா அண்ணாமலைபுரத்தில் 3 கோடியே 49 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், ஆழ்வார்பேட்டை பாரதிதாசன் சாலையில் 12 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் நூலகங்களை மேம்படுத்தும் பணிகள்;

அண்ணா நகரில் உள்ள நூலகத்தை 15 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பகிர்ந்து பணியாற்றும் இடத்துடன் கூடியதாக மேம்படுத்தும் பணி, காந்தி நகரில் உள்ள நூலகத்தை 24 கோடியே 69 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பகிர்ந்து பணியாற்றும் இடத்துடன் கூடியதாக மேம்படுத்தும் பணி;

எழும்பூர் ஹாரிங்டன் சாலையில் 13 கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சமுதாயக்கூடம், மயிலாப்பூர் லஸ் நிழற்சாலையில் 8 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பன்னோக்கு மையம், ஆதம்பாக்கத்தில் 9 கோடியே 91 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பன்னோக்கு மையம் அமைக்கும் பணிகள்;

சேத்துப்பட்டு பசுமைப் பூங்காவை 20 கோடியே 17 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி மற்றும் சித்தால பாக்கத்தில் 3 கோடியே 63 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நீருறிஞ்சிப் பூங்கா அமைக்கும் பணி;

கோவூரில் உள்ள கோயில் குளத்தை 4 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி, நெமிலிச்சேரியில் புத்தேரி ஏரியை 6 கோடியே 63 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி; கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் 3 கோடியே 71 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குளிர்சாதன சேமிப்புக் கிடங்கு அமைக்கும் பணி;

என மொத்தம் 255 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 20 புதிய திட்டப் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மண்டலப் பொறுப்பாளர் ஆ.ராசா எம்.பி. ஆலோசனை வழங்குகிறார்

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம்!

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு – ஆர்.எஸ்.பாரதி பங்கேற்பு!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!

காஞ்சிபுரம், மே 21 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் இன்று நடைபெறுகிறது. இது குறித்து மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் இன்று 21.5.2025 புதன் கிழமை காலை 9.00 மணியளவில் குன்றத்தூர் செங்குந்தர் திருமண மண்டபத்தில் உள்ள அறிஞர் அண்ணா கூட்ட அரங்கில், மாவட்டக் கழக அவைத்தலைவர் த.துரைசாமி அவர்கள் தலைமையிலும், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ, வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ, து.மூர்த்தி, மற்றும் மாவட்டப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில், கழக துணைப்பொதுச் செயலாளர் - மண்டல தேர்தல்



பொறுப்பாளர் ஆ.ராசா எம்.பி. கலந்துக் கொண்டு 2026 சட்டமன்ற தேர்தலில் கழகத்தினர் மேற்கொள்ள வேண்டிய தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்குகிறார். இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. மற்றும் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் கலந்துக்கொண்டு சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் கழக நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள் - முன்னாள் உறுப்பினர்கள், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழகச் செயலாளர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் - மாவட்ட அமைப்பாளர்கள், மாநகர வட்ட கழக செயலாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்துக் கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:- 2026 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தல் பணிகள் சம்மந்தமாக

1.கழக வளர்ச்சிப் பணி.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தெரிவித்துள்ளார்.

## காரம்பாக்கம் க.கணபதி-பி.டி.பாண்டிச் செல்வம் பங்கேற்பு!

# மதுரவாயல் 145 வது வட்ட கழக பாக முகவர்கள் கூட்டம்!

## வட்டச் செயலாளர் ப.ஆலன் அறிக்கை!

சென்னை மே:21

145வது வட்ட கழக பாக முகவர்கள் கூட்டம் நடைபெற உள்ளது இதுகுறித்து வட்டச் செயலாளர் ப. ஆலன் அறிக்கை வறுமாறு;

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்கு பகுதி, 145 வது வட்ட கழக பாக முகவர்கள் உறுப்பினர் கூட்டம் இன்று ( 21.5.2025 புதன் கிழமை ) மாலை 6 மணி அளவில் சென்னை நெற்குன்றம் ஆர். ஜே. மஹாலில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு வட்டச் செயலாளர் ப.ஆலன் தலைமை வகிக்கிறார்.

இக்கூட்டத்தில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, 11வதுமண்டலம் வளசரவாக்கம் மண்டலக் குழு தலைவரும் மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளரும் நொளம்பூர் வே. ராஜன்,தலைமைக் கழக தொகுதி பொறுப்பாளர் பி.டி.பாண்டிச்செல்வம்,பகுதி அவைத் தலைவர் ஆர்.கர்னல் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளனர்.

இதில் வட்டத்திற்கு உட்பட்ட பாக தலைவர்கள் உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் நெற்கை ப.ஆலன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## இன்று நடைபெறுகிறது! அண்ணா அறிவாலய ஊழியர்


# கே.கார்த்திக் பிரியன் - பெ.தீபிகா மணவிழா வரவேற்பு!

## கழகத்தினர் வாழ்த்துகின்றனர்!

சென்னை, மே.21,

சென்னை தேனாம்பேட்டை எம். குப்புசாமி-கே.பூரணி ஆகியோரின் புதல்வரும், சென்னை அண்ணா அறிவாலயத்தில் பணிபுரியும் கே.கார்த்திக் பிரியனுக்கும், மறைந்த சி. எம்.பெருமாள் சாமி-பி. அனிதா ஆகியோரின் புதல்வி பெ.தீபிகா-வுக்கும் மணவிழா (19.5.2025-திங்கள் கிழமை) அன்று காலை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இல்லத்தில் நடைபெற்றது.

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று மண



விழாவினை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலை வகித்தார்.

இன்று (21.5.2025-புதன் கிழமை) மாலை 6 மணிக்கு சென்னை, தேனாம்பேட்டை கவிஞர் பாரதிதாசன் சாலையில் அமைந்துள்ள எஸ்.ஐ.இ.டி.கல்லூரி வளாக அரங்கில் மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறுகின்றது.

இம் மணவிழா வரவேற்பில் கழக முன்னணியினர் மற்றும் அண்ணா அறிவாலய அலுவலர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டு மணமக்கள் கே.கார்த்திக் பிரியன்-பெ.தீபிகா ஆகியோரை வாழ்த்துகின்றனர்.

# ஒழுங்கு நடவடிக்கை!

## தலைமைக் கழக அறிவிப்பு!

சென்னை கிழக்கு மாவட்டம், கொளத்தூர் மேற்கு பகுதி, 65வது வட்ட மாமன்ற உறுப்பினரும், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி வலைதள பொறுப்பாளருமான திருமதி கு. சாரதா கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 20.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## தென்மேற்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை: எழும்பூர் தொகுதி

# 99-வது வார்டில் ஆலோசனைக் கூட்டம்!

## பரிதி இளம் சுருதி எம்.சி. தலைமையில் நடைபெற்றது!

சென்னை,மே.21-

திமுக அயலக அணி மாநில துணைச் செயலாளர் மற்றும் எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99வது வார்டு மாமன்ற உறுப்பினர் பரிதிஇளம்சுருதி தலைமையில், எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99 வது வார்டுக்கு உட்பட்ட சுந்தரம் பிள்ளை தெருவில் உள்ள மாமன்ற அலுவலகத்தில், தென்மேற்கு பருவமழை முன் எச்சரிக்கை ஆலோசனைக் கூட்டம் நேற்று (20.5.2025) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மழைக் காலங்களில் மேற்கொள்ள வேண்டிய பணிகளைக் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

99வது வார்டு கோட்ட பொறியாளர் கே.சிவகுமார், குடிநீர் மற்றும் கழிவு நீர் வாரிய பொறியாளர் ஜி. பரணிதரன், மின் துறை உதவி பொறியாளர் கே.கந்தன், மின்சார துறை பொறியாளர் டி. சபாஸ்டின், எஸ். குமார், துப்புரவு ஆய்வாளர் ஜி. கிருஷ்ணமூர்த்தி, சுகாதாரத் துறை ஆய்வாளர் எஸ்.கவியரசு, மற்றும் காவல்துறை அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியம் மானாம்பதி அரசினர் மேல்நிலைப் பள்ளியில் அந்த கிராமத்தைச் சேர்ந்த கல்பனா, ரமேஷ் ஆகியோரின் மகன் யஷ்வந்த் (15) 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 500க்கு 495 மதிப்பெண் பெற்று மாவட்டத்திலேயே முதல் இடம் பிடித்தார். அவரை காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்எல்ஏ நேரில் அழைத்து வாழ்த்து தெரிவித்து பத்தாயிரம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்கி பாராட்டினார். ஒன்றிய செயலாளர்கள் கெ.ஞானசேகரன், டி.குமார், கழக நிர்வாகிகள் சுந்தர்ராஜன், பிரவீன், ரமேஷ் ஆகியோர் உடன் இருந்தனர்.